ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:

கம்பன் காவியப்பாங்கு



இயற்றியவர்:
தென்னாற்காடு ஜில்லா, கூடலூர் தாலுக்கா
வெள்ளப்பாக்கம் கிராமம்
ஆந்திர, திராவிட வித்வான்: காலஞ் சென்ற
ஆ. கிருஷ்ணப்ப ராஜு குமாரர்
தமிழ்ப் புலவர்
வெ. கி. சக்கரபாணி ராஜு
29, பிள்ளையார் கோவில் தெரு,
வெழமங்கலம், பண்ணுருட்டி,
தென்னாற்காடு ஜில்லா.

1961.

ஸ்ரீ:
ஸ்ரீமத்: கம்ப நாட்டாழ்வார் திருவடிகளே சரணம்

"ஸ்ரீ கம்பன் காவியப் பாங்கு"

சமர்ப்பணம்.

உண்மை உலகீர்!

நமது அமர கவியும், அமுத கவியும், அருங் கவியும், அணி கவியும், ஐந்திலக்கண அழகுறுங் கவியும், காவியக் கவியும், அருஞ்சொல் கவியும், சூத்திரக் கவியும், வடமொழி தென்மொழித் துறை தோய்ந்த கவியும், நவரசக் கவியும், இராஜ கவியும், சான்றோர் கவியும், தமிழ் நாட்டின் தனிப் பெருங் கவியும், ஆழ்வார்களைக் கண்ட ஆன்ற கவியும், அரங்கனை விரும்பி ஆள்பெருங் கவியும், கலைமகள் கருணை பூத்த கவியும், உழவர் வாழ்த்தும் உத்தமக் கவியும், மாறனை வாழ்த்திய மா தவக் கவியும் ஆன; புலவர் பெருமானார், கவிச்சக்கரவாத்தியாகும் கம்ப நாட்டாழ்வார் திருவடிப் போதுகளுக்கே "கம்பன் காவியப் பாங்கு" என்னும் இந்நூலை அடியேன் உரிமையாக சமர்ப்பித்துக் கொள்கிறேன்! உயர்ந்தோர் ஆசி செய்வாராக!

இங்ஙனம்,
தமிழ்ப் புலவர்
வெ. கி. சக்கரபாணி ராஜு
(நூலாசிரியர்)

ஸ்ரீ:

நூன் முகம்.

மெய்யன்பர்களே !

இலக்கிய நடையிலும், இலக்கண நடையிலும் வரம்பு கொண்டு வளர்ந்தோங்க வேண்டுவது தமிழ்ப் பற்றுடையாரின் பேரவாவாகும். தமிழோ எழுவகை, மதம் முப்பத்திரண்டு, உத்திகளைக்கொண்டு எழுத்து, சொல் பொருள், யாப்பு,அணிகளாகியஇலக்கண வரம்போடு மிளிர்வதாகும் அதிலும் அது, இலக்கியமாக முதல் நூல்; வழி நூல், சார்பு நூல்களை உரைநடையும், செய்யுள் வடிவாலும் பயனுடையனவாக அமைந்து இருப்பதையும் நாம் காணலாம். ஆயினும் அது சிறுபான்மை உரைநடையிலும் பெரும்பான்மை செய்யுள் வடிவாலுமே பயன்பட்டன எனினும் மிகையாகாது. ஏனெனில் ஐந்திலக்கண வழியில் இணைந்த தமிழோ முக்காலங்களுக்கும் பயனுடையதாம் என்பதைக் கருதியே என்பதாம். எங்ஙனமெனில் சில்வகையெழுத்தில் பல்வகைப்பொருளைச் செவ்வநாடியில் செறிதணிந்திருந்து திட்ப நுட்பம் சிறந்தனவாக போற்றப்பட்டு வந்தன. அது யாது கருதியோ தற்போது எங்கும் எழுத்து, சொல், பொருள்களைத் தழுவிய உரைநடையினையே பெரிதும் போற்றப்படுவதைக் காண்கின்றோம்.

அப்படியாயின் புத்தகமே நெஞ்சாக வளர்ந்த வளர்ச்சியே நிகழ்காலத்திற்கு மட்டும் பயன்பெறுவதாக அல்லவா அமைந்துவிடும்? இதில் பழையன கழிதலும் புதியன புகுதலும் எங்ஙனம் சிறக்கும்? எனவேஉண்மை தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுடையார் மேற்கொள்ளவேண்டுவது யாது? ஆழ்ந்து சிந்திப்பாராக! அங்ஙனமாயின் முக்காலத்திற்கும் பயனுறும் எனக்கருதி நம் முன்னோரால்;தமிழரும்,புலவரும் எழுத்தாளரும், தமிழும், தமிழ் பற்றும், வளர்ச்சியும், உணர்ச்சியும் எப்படி அமையவேண்டும்? செய்யுள்வடிவான தாய் முறையிலல்லவா அமைந்து ஆர்வம் கிளர்ந்தெழ

வேண்டும். அப்படி பார்க்கும்போது பழந்தமிழ் நூற்களை யும் இலக்கியங்களையும் அல்லவா ஆய்ந்து கற்க அவா உறுதல்வேண்டும். ஆயின் அதில் ஈடும் எடுப்பு மற்றதும், இலக்கண வரம்புடையதும், கற்பனைக் களஞ்சியமானதும் சொற்செறிவு, பொருட்செறிவு, புனைநலம்யாவும் ஒருங்கே அமையப்பெற்ற நூல்எது? கவிச்சக்ரவர்த்தியான உயர்திரு கம்ப நாடரின் காவியப்பாங்கு அமைந்த கம்பர்ராமாயண மன்றோ? கற்றோர் இதயங்களிக்க நாரிருக்கின்று அமுத மாக விளங்குவது? எனவே இதனை எண்ணியே சாதாரண மாக கம்பன் நூலில் அமைந்து கிடக்கும் பொருட்செறிவு களை ஒருவாறு பட்டியல் வகுத்தாற்போல் தலைப்புக்களாக "கம்பன் காவியப்பாங்கு" என்னும் இந்நூலை ஆர்வத்தின் காரணமாக நமது தமிழ் நாடும், உண்மைத் தமிழரும் மிகுதியும் அதன் நயங்கருதியே கற்கவேண்டும். அப்படி கற்க இச்சிறு நூல் என்றும் ஒரு தூண்டுகோலாக ஆர்-வத்தைவளர்க்கும் என்ற நம்பிக்கையாலேயேஎழுதி வெளி யிடத்துணிந்தேன் எனில் எனது உண்மை அவாவினையே தமிழுலகம் கொள்ளவேண்டுமேயன்றி எனது சிறுமதியின் வாயிலாக வெளிவரும் நூலின் பிறகுற்றங்களை நோக்க-லாகாது எனவும் வேண்டுகிறேன்.

இனி அந்த நோக்கில் 1961 லேயே இதனை வரைந்தும் ஒரு பக்கம் வெறும் பறைசாற்றலாக தமிழ் வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி என கூப்பாடு போடுவதாக அமைந்த காரணத்தால் என்னமுயன்றும் ஏதுமற்ற எனக்கு உடனடி யாக வெளியிட முடியாமலேயே போயிற்று. ஆயினும் உண்மைத் தமிழ்ப்பற்றுக்கு அறிகுறியாக கீழ்க்காணும் சில பேரன்பர்கள் முன் வந்தமையின்கண் இப்போது இந்-நூல் வெளிவர முடிந்தது. இதற்கு எனது இதயங்கலந்த நன்றியை மறவாது தெரிவித்துக்கொள்வதோடு, தமிழ்ப் பேரன்பர்களும், பெரியோர்களும், புலவர்களும், நாள்,

வார, பட்ச, மாத இதழாசிரியர்களும் நண்பர்களும் ஆசி கூறி வரவேற்பரென்றும் இன்னும் இதுபோன்ற எழுச்சிக்கு உறுதுணையாக நிற்பரென்றும் நம்புகிறேன்.


மற்றும்; கீழ்க்காணும் சிலரது செய்ந்நன்றிக்கு பாராட்டாமல் இருக்கமுடியவில்லை. ஆதலின், இந்நூல் பெரிதும் வெளிவர ஊக்கமளித்த பெருமக்களும், அன்பின் செல்வர்களுமான பண்ணுருட்டி பிரபலஸ்தர்கள்: திருவாளர்கள் சித்தானந்த நாயகர், ஏ. எம். ஆர். ராமலிங்கம், கிருஷ்ணமூர்த்திசெட்டியார்பாவாடைபடையாட்சி பனையடிகுப்பம் முத்துகிருஷ்ணு ரெட்டியார், இராஜாராம் ரெட்டியார், இராமகிருஷ்ணு ரெட்டியார், சீதாராம ரெட்டியார்; சொர்ணூர் சந்தானசாமி ரெட்டியார், நாராயணரெட்டியார், இராமச்சந்திர ரெட்டியார் (போஸ்ட் மாஸ்ட்டர்) எஸ். எல். கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார் (அ. இ. கா. க.மெ.) கோழிப்பாக்கம் கே. கே. முத்துகொமரப்ப ரெட்டியார், பெருஞ்செல்வரும்-நிலக்கிழாருமான பட்டாபி ரெட்டியார் வீரப்பார் எஸ். சங்கர ரெட்டியார், ராமூர்த்தி ரெட்டியார் மருதூர் வெங்கடாசலம் நாயுடு, ஷியூர் பிரசிடெண்ட் அவர்கள்; மோகூர் மகாலிங்கம் பிள்ளை; சம்பாரெட்டிப் பாளையம் ப.போ. தலைவர் வரதராமாநுஜ நாயுடு, வி. எம். ஜெயராம நாயுடு, பட்டர் நாயுடு, பாஷியம் நாயடு, ஆதி கேசவலு நாயுடு; ரங்காரெட்டிப்பாளையம் வெங்கடசாமி ரெட்டியார்;புதுவை ஆனந்தரங்ககிருஷ்ணபிள்ளை (பி.தோ.) வெங்கடாசலம் ராஜாபுதூர் (தி.வ.)பி. மதனகோபால்ராசு ஆகியவர்க்கும் இந்நூலை எம் வெண்டுகோள்படி அச்சிட்டு உருவாக்கித்தந்த கடலூர்ஔவைஅச்சகத் தோழர்கட்கும் எனது நன்றியை அன்புடன் சேர்த்துக்கொள்ளுகிறேனாக!

அன்பன்,

வெ. கி. சக்கரபாணி ராஜு.

ஸ்ரீ:

ஸ்ரீமதே இராமானுஜாய நம:



தமிழ்ப் புலவர்

வெ. கி. சக்கரபாணி ராஜு

(நூலாசிரியர்)

ஸ்ரீ:

திரு. கம்பன் காவியப் பாங்கு

"நூலின் பயன்"

கம்பன்றன் கற்பனையும் காண்தமிழின் யாப்பணியும்
செம்பொருளாழ்த் திங்கவியும் தேடரிய - உம்பர்
பெருநலமும் பேசும் அகம்புறமாம் பேறும்
தரும்கம்பன் நூல்கற்பில் தான்! 1

வாக்கும் மனமும் வளர்தமிழின் மாண்பமைந்த
நோக்கும் நுடங்காத நுட்புணர்வும்-ஊக்கமுற
சீலம் அறிவும் செறிகம்பன் சீர்புகழ்நூல்
ஞாலம்அறி பயனும் நன்கு! 2

இம்மை மறுமை எழிலின்பம் ஏய்வதுடன்
எம்மை யுலகவரும் எதிர்கொள்ள - தம்மை
அருளாழி வண்ணற் கருகிருத்தும் ஆய்வும்
தரும்கம்பன் நூற்பயனும் சார்பு! 3

மதம்சமயம் பத்திமல்க மாலடிக்கே பற்றுல்
நிதம்பெறவே வைக்கும் நேரே - இதமெல்லாம்
காவியத்தால் கற்பால் கவியமுதம் கைதரவே
மேவிடமாம் கம்பன்நூல் வேட்பு. 4

உண்மை நெறிவிளக்கும் ஓதும் உணர்வளிக்கும்
திண்மைப் பொறிவளர்க்கும் சீருடையோர்-அண்மைப்
பெறவைக்கும் ஐந்திலக்க ணப்பயிற்சி பெட்போ
டுறவைக்கும் கம்பன்னூல் ஓர்! 5

உறுதிப் பொருள்நான்கும் உறலும் உலகில்
மறதி யிலாவாழ்வு மல்க - திறலமைக்கும்
நீண்ட தமிழ்ப்பற்றும் நிறைபுலமை நேயமெலாம்
ஆண்ட கம்பன் நூற்பயனும் ஆய்! 6

நூலின் பொருளடக்கம்.

ஓர் தனி வேண்டுகோள்!

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

இந் நூலைக் காணும் பேரன்பர்களும் செல்வர்களும், இனி வெளிவர வேண்டிய எனது பொது நூல்கள் 13 வரையிலும், சமய நூல்கள் 15 வரையிலும் இருக்கின்றன. இவைகளில் சிறப்பாக 103 தலைப்புகளில் 1100 வெண்பாக்களோடு (தற்காலத்திற்கேற்றபடி) அமைந்த "மாநில மாந்தர் இயல்பு" என்னும் நூலையும், சுமார் 21 வருடங்களாக தொகுத்து வைத்துள்ள "திருக்குறள் நீதி விளக்கச் சுருக்கத்தினையும், தெலுங்கு லிபியில் உள்ள நீதி சாத்திர பொழிப்புரையை தமிழில் மொழி பெயர்ப்பு செய்துள்ள நூலையும் வெளிவர, ஆவனசெய்தாதரித்து உதவும்படியும் வேண்டுகிறேனுக.

இங்ஙனம்,
நூலாசிரியர்.

ஸ்ரீ:

ஸ்ரீ கம்பன் காவியப் பாங்கு

கவிச் சக்ரவர்த்தி ஸ்ரீ கம்ப நாட்டாழ்வார்

வணக்கம்

"கல்வியின் பொருளும் கவினிசை வகையும்
கணிதநற் றர்க்கமீ மாம்சை
ஒல்வகையாயுர் வேதமும் ஒளிசேர்
ஓவியம் நாட்டியம் சிற்பம்
நல்வினைப் பலவும் நாட்டியக் கவிஞன்
ரசாயனம் நாத்திகம் வரையாம்
தொல்வகைச் சுருதி யுத்திகள் தோன்றத்
தொகுத்திடு மொரு புல வோனும்." 1

"சாத்திரம்யாவும் தன்வழி காணச்
சமைத்தவன் சகத்தவர் நாளும்
சூத்திரமோ வென்றெளிபெற வியப்பின்
இசைத்தவன் விருத்தபாக் கடற்கே
ஏத்திய கவிஞன் எழில்கவியரசர்க்
கரசனென் றியம்பிட இருந்தோன்
ஆத்திகமுறையை அழகுற உரைத்த
அரும்பெரும் கம்பன் ருள் மறவோம்!" 2

சாற்றுக் கவி

ஸ்ரீமத் காரை வைணவப் புரவலரும்;
பிரபந்த வித்வானும் உபந்நியாச கேசரியும்,
ஸ்ரீமத் கம்பராமாயண இரத்நாகரரும்,
அருள்மாரி ஆசிரியரும், நாவலரும்,
ஸ்ரீமத் கம்ப ராமாயண சதாபிஷேகச் சம்பந்நரும் ஆகிய
ஸ்ரீமான் நா ஸ்ரீகாந்த இராமாநுஜஸ்வாமி
அவர்களால் இயற்றி அருளியது.

யானுரைத்த ராமகதை யாமவற்றின் சாரமெலாம்
தானுரைத்தான்சால்தலைப்பால் சார்பமைத்தே-ஊனமிலா
வெள்ளத்தின் பாக்கத்தான் வேட்டகுசீர் சக்ரபாணி
உள்ளத்தின் ஒண்புலமை யோர்ந்து!

திரு ஆழ்வாராம்

கம்ப நாடர் சிறப்பும் வாழ்த்தும்

கம்பன் கவிச்சிறப்பும் கற்பனையும் காவியத்தில்
நம்பும் நடையும் நவில் நயமும் - பம்பும்
அரும்பொருளும் சொல்லழகும் ஆழ்கருத்தும் ஓத்தின்
பெரும் வியப்பும் சந்தமுறல் பேசு: 1

விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் மேலாம் பெரும்புலமைக்
கண்ணவர்க்கும் காணும் கவினமுதாய்-தன்னளிப்பாம்
செந்தமிழின் செம்மை நடைமிடுக்காய் சேர்ந்தொளிரும்
சுந்தரமாம் கம்பன் நூல் சூழ்வு! 2

ஒப்புலகில் வேறொருவர் உண்டென் றுரைபுகல
எப்பொழுதும் எங்கும் இலார் இவராக - தப்பேதும்
இல்லாமல் ராமன் இரும்காவியம் ஈந்தோன்
எல்லாம், எழில் கம்பன், ஈண்டு! 3

உறுதிப், பொருள் நான்கும், உற்றோர்க், குதவ
மறதி யிலாவகையில் வாய்ப்பாய்ப் -பெறுதிரென
மாநிலத்தே செந்தமிழில் மாண்பமைத்தான் கம்பன்றன்
வானிலத்தோர் வாழ்த்துகதை வாழ்த்து 4

இன்றமிழும் ஈடில் இலக்கணமும் ஏதமிலா
முன்னிலக்கின் முக்கியமாய் முற்றுய மன்தமிழின்
சீரிலக்கி யப்பண்பும் தேர்ந்தமைக்கும் தெய்வகவி
பேரிலக்கி யக்கம்மன் பெட்பு! 5

உய்த்துணர இவ்வுலகில் ஒத்தனவே என்பவைகள்
மெய்த்துறையால் அத்தனையும் மேல்விரித்தான் -
பெய்துறைகள்
வல்லபெருங் கவியாம் மன்னும் எழில் கம்பன்
சொல்லழகாய்த் தானே தொகுத்து! 6

ஆழ்வார்கள் அன்புரைகள் ஆரியர்தம் மெய்யுரைகள்
வாழ்புலவர் நல்லுரைகள் மாமனத்தே - சூழ்வாக
தன்னூலில் தாழாதிலக்கணத்தால் சால்புறவே
மன்னவைத்தான் கம்பன்றான் மற்று 7

திரு. கம்பன் காவியப் பாங்கு

காப்பு:

குருகூர்ச் சடகோபன் கோலத் திருத்தாள்
பெருக்காம் கவியிணைக்கப் பெட்பு: 1

அருளும் பெரும் வள்ளல்! அன்புருவாய் நின்றோம்!
இருளும் இரிந்தோட ஏய்ந்தோன்! - தெருளும்
திருவாய் மொழியுரைத்தோன்; சீர்கம்பன் பாங்கு
தருவாய்மைக் காமவன்றாள் சார்பு: 2

அவையடக்கம்:

மலையிலக்காய் ராமகதை மாண்பை மனத்தே
நிலையிலக்காய் நேர்கொண்டு நீடும் -அலையுலகில்
கல்லாதேன் காவியத்தின் பாங்கைக் கலந்தமைத்தேன்
கல்லாதான் காமுற்றற் றாங்கு! 3

ஒல்லும் கலைநிலைகள் ஒன்றுமே யோராதேன்
வெல்லும் தலைக்கம்பன் மெய்க் காவியம் - சொல்லும்சீர்
பாங்குசில தேர்ந்தெடுத்துப் பார்வியைத்தேன் பாண்புலகு
தாங்குநலம் பார்த்தே தரித்து! 4

அன்பின் அணிகலமாய் ஆள்கம்பன் காவியச்சீர்
இன்பின் நிறைவாக எல்லோரும் - பின்பற்ற
ஞாலத்துச் சீலம் நவில் கல்வி ஞானமெலாம்
கோலத்தில் இல்லேன் சொல் கோப்பு. 5

நூல்:

மதுரமொழி வான்மீகி வானுவக்க மண்ணில்
சதுரமொழி யென்றேற்றத் தந்தான் - முதிர
வடமொழியில் ராமகதை மாந்தித் தமிழில்
திடக்கம்பன் தேர்ந்தளித்தான் தேறு! 1

காண்டங்கள் ஏழினிலே காண்மௌலி பூண்புவரை
நீண்டராம நற்சரிதம் நேரளித்தான் - வேண்டமிக
வெண்ணெய்ச் சடையன்மன் வேந்தன் துணைப்பெருக்கால்
எண்ணகவிக் கம்பன்றான் ஏற்று! 2

கலைமகளின் பூரணமாங் காருணிய ஈட்டால்
தலைமகளாம் சீதைத் தனதாழ் - உலையாத
பேர்கதையாய் வைணவர்கள் பேசப் பெருநயங்கள்
சேர்பமைத்தான் கம்பன் நூல் தேறு!

மாதா பிதாகுருவும் தெய்வம் வலத்துணைவர்
நாதா மனைவி நவில் நேயர் - மோதா
இளைமற்றோர் கோவியல்கள் கேடின்றி வாழ
விளைவிசைத்தான் கம்பனில்சீர் வேண்டு. 4

சூத்திரமாய் வேதத் தொகுப்பாய் விருத்தநடை
நேத்திரமாய் நீள்சுவைகள் நேர்பெறவே-தோத்திரமாய்
நூலை நுவன்றுகொள நோக்கமைத்தான் ராமகதை
வேலை நலக்கம்பன் வேட்டு! 5

காதைகள் ஆயிரத்தோ டெண்ணூறு காண்படலம்
ஓதுமுதல் நூற்றிருபத் தெட்டொப்ப - மோதுசமர்

பத்தாய் விருத்தம்பன் னீரா யிரம்பத்தா
றொத்தாள் வணம்தொணூற்றா றோது! 6

காண்டங்க ளேழதனில் மேற்கண்ட காவியத்தில்
நீண்ட பலபொருள்கள் நின்றொளிர - வேண்டிடுசீர்
நாடுமரண், நட்பு, படை,குடிசூழ் நல்லமைச்சின்
பீடுமளித் தான்கம்பன் பெட்பு! 7

மதம்பூதம் ஆறுமழை நாள்கோள் மலையும்
இதம்சோலை நாடுவயல் ஏர்வாம் - நிதம்மோதும்
கல்வியுடன் ஓவியம்சிற் பம்பரதம் காடுநிலை
பல்வினைகள் கம்பனிலே பார்! 8

ஏதிலார்க் காமபயம் ஈதல் இறைக்குணங்கள்
நீதியேராம் சீர்நடைகள் நேர்பெறவே - தூது
திறங்கற்பும், ஈதல், பெருஞ்சிறப்பும், செப்பும்
அறம்யாவும் கம்பனிலே ஆய்! 9

நிலங்கள் குலங்கள் நீண்ட அரசேர்
பலங்கள் சமர்முறைகள் பற்றா - நலங்கள்
தலங்கள் தவங்கள் தகைசான்றோர் கொண்ட
பொலங்கள் சீர் கம்பனிலே பொற்பு! 10

விருந்தேற்றல் வேறானவர் தோற்றம் மெய்மைப்
பொருந்துவன பொன்னகரப் பொற்பும் - மருந்து
வகைப்பயன்கள் மாணும் அரிவையர் வாழ்வும்
பகையாவும் கம்பனிலே பார்! 11

பூக்கொய்தல் உண்டாட்டுக் கழங்கும் புனலாடல்
கோக்கண் டுரையாடல் கோல்பழகல் - தாக்கும்
பெருமாயம் சாயை யிழுத்திடுதல் பேசும்
உருவாம்தம் கம்பனிலே ஓர்! 12

காவியத்தின் இன்பம் கருதும் இலக்கணங்கள்
மேவியநூல் வான்பயனாய் விள்ளுவதை - ஓவியமாய்க்

354

காட்டுவதாம் கம்பன் கலைமகளின் தன்னருளால்
வேட்டுமிகக் கற்றறிநூல் வேண்டு ! 13

கங்குல் பகல்தோற்றம் காதல் பிரிவாற்ரு
தங்கு மறியிகழ்தல் அன்புணர்த்தல் - பொங்கும்
கடல் காணல் போதார் புனைவறிதல் போற்றும்
உடல்பேணல் கம்பனிலே ஓர்! 14

மதுவொழித்தல் வாய்மை வரம்புரைத்தல் மாற்ருர்
கதம் வினைகள் காட்டலெலாம் காணும் - விதமாக
கற்பனைகள் சேரக் கவினியற்கைக் காட்சிகளைப்
பொற்புறவே கம்பனிலே பூண்! 15

தீயவினைத் தெம்புறினும் தேய்ந்தொழியும் நில்லாது
தூயவினைத் தானே தொடர்ந்தொளிரும் - ஏயவினை
என்றும் இணையுமெனல் எல்லாம் விளக்கமுடன்
ஒன்றுமுரைக் கம்பனிலே ஓர் ! 16

துர்ச்சனரின் தம்தொடர்பும் சொல்லு மவர்செயல்கள்
கர்ச்சனமே யன்றிக் கடமையுரு - சர்ச்சனர்க்கே
என்றெடுத்தே என்றவிடமெல்லாம் ஏற்பமைய
நன்றுரைத்தான் கம்பன்ருன் ருடு ! 17

கம்பன்றன் காவியத்தைக் கண்டோரும் கேட்டோரும்
உம்பர் அமுதிதற்கே ஒவ்வாதாம் - அம்புவியில்
முத்தி கொடுத்திடலால் முன்ஞல் புலன்களிக்க
வொத்திடலால் என்பரெழில் ஓர்ந்து ! 18

தாரகநா மப்பெயராய் தன்னுமம் தாங்கியறம்
பாரகமாய் நிற்கவே பண்டுரைத்தே - ஊரகமாம்
பேரயோத்தி வந்த பெருமானின் பேர்கதையைச்
சேரவுத்தித் தேர்ந்தளித்தான் செப்பு ! 19

வேட் னுடன்குரங்கு மேவும் அரக்கனையும்
கோடத் துணைவராய்க் கூட்டளித்தான் - நீடவரும்

அன்பால் சவரிக்கும் ஆஞ்சடாயு பட்சிக்கும்
இன்பருளும் கம்பன்சொல் ஏத்து ! 20

விருத்தம் உயர்ந்தது! விளங்கழகோ மேலாய்ப்
பொருத்தம் உயர்ந்தது! பூவில் - அருத்தம்
வளர்ந்தது! சூத்திரம் மாணடைந்த! உள்ளக்
கிளர்ந்தது! கம்பன்பா! கேள்! 21

சதுரப்பா! சால்பு முதிரப்பா! சார்ந்த
மதுரப்பா! யுத்தியெலாம் மன்னும் - கதிரப்பா!
காணும் கவிச்சக்ர வர்த்திப்பா! காவியமாய்
பேணும்பா! கம்பன்பா! பெட்பு! 22

ஆழ்வார்கள் ஆரியர்கள் ஆகும் அவர்கருத்துச்
சூழ்வாக அத்தனையும் தோற்றுவிக்கத் - தாழ்வின்றி
தன்னூலில் சாற்றினன் சான்றோரில் சான்றோனும்
முன்னூ லளித்தகம்பன் மொய்ம்பு! 23

மேலிருந்து தாழ்பிறப்பு மேற்கொண்டு விண்ணவர்தம்
பாலிருந்தச் சோர்வதனைப் பற்றியசீர் - மாலிருந்த
வாற்றை யணிந்தமைத்தான் காவியமாய் அண்ணலெனப்
போற்றப் பிணைக்கம்பன் பூத்து! 24

பத்திக்குப் பாதுகைகொள் பாங்கார் பரதனையே
எத்திக்கும் போற்றிடவாங் கேற்றுவந்த - முத்திக்கு
வித்தாகும், மூலப் பரம்பொருளை மேல்விரித்தான்
சத்தாகும் கம்பனூல் சான்று! 25

தொண்டுக் கிளையவனைச் சொல்ல உலகெல்லாம்
பண்டு துணைக்கொண்டான், பற்றெழிலக் - கண்டதனை
நாவீரர் போற்ற நவின்றான்றன் காவியத்தில்
பாவீரன் கம்பன் பரிந்து! 26

கற்பிற் கிலக்கணமோ காரிகையாம் சீதையே
பொற்பிற்கு மாங்கவளே பூரணமாய் - விற்பெறவே

வொல்வகைமெ லாங்காட்டி உத்தியொடு நூல்விரித்தான்
நல்வகையால் கம்பன்முன் நாடு! 27

தோழமைக்கு வேடனையும் சுக்கிரீவன் வீடணனை
சூழவைத்தே ஆண்டமையைத் தோன்றவைத்தான் -
தோழர்சீர்
காட்டிக் கவிநயத்தால் காண்புலவர் காமுறவே
நாட்டில் நவில்கம்பன் நன்கு! 28

முறைசொலினும் மூர்க்கர் முனிந்தகல்வர் முற்றும்
குறைசொல்வர் கோலேற்பர் கொள்ளா-கறையாள்வர்
தென்னிலங்கை வேந்தை யிதற்கிலக்காய்ச் செப்பினன்
முன்னிலங்கக் கம்பன் முனைந்து! 29

மாருதியின் பத்திக்கு மணியா சனந்தாங்க
பாரதிலே சான்று பரிந்தளித்தான் - சீரதிகங்
கொண்ட திருமாலே திக்காம் நமக்கென்று
பண்டுரைத்தான் கம்பன்சொல் பற்று! 30

குலம்கொள்கை கோளும் நிலைக்கோதும் மற்றும்
சலம்காலம் தாழ்மைத் தருமாம் - பலம்யாவும்
பாராதே எற்றபயம் பண்டளித்தான் ராமகதை
நேராகக் கம்பனிலே நேடு! 31

முனிக்கணங்கள் மூத்தசர பங்கருடன் முன்னும்
தனிச்சபரி சார்விராதன் தாய்மை - கனிபரத்வன்
வாலி இவர்க்கெல்லாம் வாழ்வளித்த பெம்மான்சீர்
கோலும் கவிகம்பன் கோடு! 32

மாணவர் தங்கடமை மாறில் குருவினிடம்
பூணவர்தம் மாண்பு பொருந்திடலும் - காணச்
சரிதம் முழுதும் தகவே சகராய்ப்
பெருகுவதும கம்பனிலே பெட்பு! 33

தாய்ப்பற்றுத் தான்வளர்த்தல் சாரும் ஒழுக்கநடை
யாய்ப்பற்றும் அன்பும் அடைக்கலந்தான் -வாய்ப்புடைய
காதை யெனவளரக் காட்டினன் காவியத்தை
மேதை பெறுங்கம்பன் மிக்கு! 34

காதல் களிப்பு கழங்காடல் கள்தீமை
ஓதல் உயர்வு உறுதாழ்வு - நோதல்
அனைத்தும் நுட்பமைய ஆங்களித்தான் நூலில்
முனைந்தோ ரிலாக்கம்பன் முன் 35

மக்களவர் பண்புடனே மாதர்தம் பண்பொளிர
மக்கள் மகள்கள்தம் மாண்பெல்லாம்-முக்கியமாய்
மூத்தோர் இளையோர் முறைமை யெலாம்கம்பன்
கோத்தே கொடுத்தான்சொல் கூர்ந்து! 36

தலைவி தகுஞ்செயல்கள் சால்பில் தகாத
குலவி வருஞ்செயல்கள் கூர்ந்தே - மலைவின்
நினைக்கமகிழ் ராமகதை நேர்கொள்ள நீடும்
புனைக்கொடுத்தான் கம்பன் புவிக்கு! 37

ஆறு வதுகாண்டம் ஆம்வரையில் ஈடெவரும்
தேறுத எல்லாம் தெரிந்தேற்க - கூறுத
இல்லை எனவெவரும் ஏற்றியம்பக் கம்பன்றான்
எல்லை எனவகுத்தான் இங்கு! 38

தவம்வலிமை செல்வம் தகுந்துணைமை நுட்பம்
நவம் கற்ற கல்வியெலாம் நன்றோ? - அவமேயாம்
தீவழியில், சிந்தை, செலுத்தலெனக் கம்பன்றான்
பாவழியில் தேர்ந்துரைத்தான் பார்! 39

தலைவி தலைவனுக்காய்ச் சாருநலம் பண்பு
நிலையாகும் நேர்மை நிகழ்வு - தலைகூட
சீதை இராமன் இருசேர்வு தீர்வுகளில்
காதைகாட் டல்கம்பன் கங்கு! 40

சாதி சமயமெலாம் சாற்றும்மெய் யன்புடையார்க்
கேதும் உகந்தவையாய் ஏலாது!-கோதாம்
குலமுடையார் கொள்பவையாய் கம்பன்ருன் கூறும்
நலமுடைமை நாமறிதல் நன்று 41

நாடும் வளமும் விளைவுடனே நன்மருந்தும்
கூடுந் தவமும் கொடையமைய-நீடும்
குடிவாழ்வும் கூலமும் கூடிசையும் பாட்டும்
படியாட்டும் கம்பனிலே பார்! 42

என்னில்லைக் கம்பனிலே என்றிரும்பூ தெய்திடவே
முன்னில்லை என்றுரைக்க முற்றளித்தான்-மன்னெல்லை
தாண்டி மதிப்புற்ற தாய்க்கவிஞன் மாதவத்தான்
பூண்டிடெழில் கம்பனவன் பூத்து! 43

சிறையிருந்தா ளேற்றம் தெரிவிக்கும் சான்ருல்
முறையோர் நலமுடனே மூன்ரும் - நிறையறங்கள்
சீராக்கும் போர்குணங்கள் சென்னி பெருக்கென்பார்
நேராக்கும் கம்பன்நூல் நீடு! 44

சீரரங்கன் சொற்படியே தென்குருகூர் ஆழ்வானைப்
பேரரங்க மாகநூல் பெட்பிசைத்தான் - ஏரரங்கம்
ஆம்பெரியன் நாதமுனி ஆள்படியே பாஏற்ருன்
தாம்அவனும் கம்பனெனச் சாற்று. 45

கற்பனையும் கொள்கைக் கடைப்பிடியும் காண்கதையும்
விற்பனமும் சொல்வலமும் மிக்குறையும் - பொற்புகளும்
சாற்றும் பொருள்வளமும் சார்ந்தத் தனிநயமும்
போற்றுபெறும் கம்பன்றன் பூப்பு! 46

ஆழ்வார்கள் வேலை யகம்மூழ்கி முத்தெடுத்தே
வாழ்வான அத்தனையும் மாநிதியாய் - தாழ்வின்றி
எப்பாரும் கொள்ள இராமன்றன் காவியத்தைத்
துப்பளித்தான் கம்பனெனச் சொல்! 47

சிதம் நீள் தெள்மனத்தின் நேர்மைக்கும்
போதப் ஏற்றும் புலமைக்கும் - சோதிக்க
மாலிலக்காய் ராமகதை நாடித் தமிழ்வளர்த்தான்
நாலிலக்குக் கம்பனென்ன நாடு 48

ஊருலகம் கொள்குறிப்பும் உற்றோர்மற் றோர்குறிப்பும்
நாரியர்தம் நீள்குறிப்பும் நட்போர்தம் - பேரிலுறும்
நல்குறிப்பும் நாட அகம்புறமும் நாட்டுபெறும்
பல்குறிப்பும் கம்பன்சொல் பார்! 49

தாய்தம்பி ஆம்வரத்தைத் தந்தைமுன் கேட்டபெரும்
ஆய்தந்த ராமன்றன் அன்பொழுக்கம் - வாய்ப்புறுசீர்
நேர்மை நிலைபெற்ற நீர்மைத் தெரிகம்பன்
கோர்வைசீர் கம்பனிலே கோடு! 50

முடியாட்சி முன்னும் குடியாட்சி முற்றும்
நடுவாம் சமதர்மம் நன்காய் - எடுத்தாண்டான்
சேக்கிழார் சிந்தா மணிநூலும் தேக்கமுறப்
போக்கமைத்தான் கம்பன்னூல் போர்த்து 51

வாக்கும் மனமும் வளர்தமிழின் மாண்பமைந்த
நோக்கும் நுடங்காத நுட்புணர்வும் - ஊக்கமுற
சீலம் அறிவு செறிகம்பன் சீர்புகழ்நூல்
ஞாலம் அறிபயனும் நாடு 52

சடகோபன் றன்புகழைச் சால்பமைத்தே பாட
இடமாகும் கம்பனன்றி யாரே! - படமாக
மேவும் பலபொருளை மிக்கதெனக் கேட்டறிய
பாவும் படிசெய்வார் பார்! 53

முழுமுதலோன் நாரணனே முற்றுவான் என்றே
விழிப்புறவே தந்தைமுன் மேலாய்-விழுப்பொருளாம்
வேதக் கருத்துரைத்தான் வீயாச் சிறுவனென
ஓதுமொரு கம்பன்சொல் ஓது! 54

வாழ்த்து.

வாழ்க! வளர்கம்பன் மாகாவியப் பாங்கு!
வாழ்க! வருநூலே வாழ்த்து! 1
வான்வாழ்க! ஆவாழ்க! அந்தணரும் வாழ்கவே
நான்வாழ்க! பேர்கம்பன்! சால்பு. 2

நூல் இனிது முற்றுப்பெற்றது.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	வரி 7	நடையிலும்	நடையாலும்
4	வரி 5	சொட்செறிவு	சொற்செறிவு
ஷை.	வரி 7	கண்	—
5	வரி 16	மோகூர்	மோவூர்
ஷை	பாரா 2 22-வரி	வெண்டு கோள்படி.	வேண்டு கோள்படி
9	வரி 4	இசைத்தவன்	தொகுத்தவன்
10	2ம் அடி	—	இலராக
ஷை.	4-வரி	யக்கம்மன்	யக்கம்பன்
11	வரி 2	பெய்துறைகள்	பெய்த்துறைகள்
11	காப்பு 2-பாட்டு வரி 2	நின்றேம்	நின்றேன்
ஷை	வரி 2	காவியம்	காவ்யம்
13	3-வரி	படைகுடிசூழ்	படைகுடிசூழ்
15	வரி 6	கிளந்தது	கிளர்ந்தது
16	வரி 1	வீடனை	வீடணனை
18	வரி 2	நிறையறங்கன்	நிறையறங்கள்
ஷை	வரி 3	சென்னி	செவ்வி
19.	வரி 2	போதம்	போதமே
ஷை	வரி 21	பாட	பாடல்